(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 47.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 ஏப்ரல் 08, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

276/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றில் ஊழியர்கள் சார்பாக புதிதாகத் திறக்கப்படும் கோப்புக்களின் எண்ணிக்கையை, பொருளாதார அபிவிருத்தியைக் கண்காணிக்கும் அளவீட்டு அலகாகப் பயன்படுத்த முடியும் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றில் புதிதாகத் திறக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாதமும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றில் புதிதாகத் திறக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகவல்கள் மாதத்தின் எத்திகதியில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

383/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களில் இலாபம் ஈட்டும் மற்றும் நட்டத்தில் இயங்கும் டிப்போக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி பேருந்துகளில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) பேருந்துகள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) இலங்கை போக்குவரத்துச் சபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையிலிருந்து நீக்கப் பட்டுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) புகையிரதங்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புதிய புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இலங்கை புகையிரத திணைக்களத்தின் மொத்த ஊழியர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அந்தத் திணைக்களத்தின் அமய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

424/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வவுனியா நகருக்கான குடி நீர் விநியோகத் திட்டம், 2010-2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், இத்திட்டத்திற்காக வயல் நிலங்கள், மேட்டுக் காணிகள், குடியிருப்புக்கள் மற்றும் மதத்தலங்கள் ஆகியன சுவீகரிக்கப்பட்டன என்பதையும்;

(ii) விவசாயிகள் மற்றும் காணி உரிமையாளர்களைப் பாதிக்காத வகையில், இது தொடர்பில் விவசாய அமைப்புகள், பிரதேச செயலாளர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகிய தரப்புகளுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தமொன்று 2013.11.05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குப் பதிலாக வழங்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளுக்கு இதுவரையில் பூரண அளிப்புப்பத்திரங்களை வழங்குதல், முறையான நீர்ப்பாசன வசதிகள் மற்றும் உட்பிரவேசப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியன மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மேற்படி குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் இதுவரையில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) அணைகளிலிருந்து வெளியேறும் மேலதிக நீரை கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான, புனரமைக்கப்பட்டுள்ள குளங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

427/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் குடிநீர் வழங்கப்படாதுள்ள பிரதேசங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட குச்சவெளி, புடவைக்கட்டு, திரியாய் மற்றும் சலப்பையாறு போன்ற பிரதேசங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மூலம் குடிநீர் வழங்கப்படாததால், அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 5000 குடும்பங்கள் குடிநீரைப் பெறுவதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களுக்கு துரிதமாக குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) பொதுவாக திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022.01.01 தொடக்கம் 2024.01.01 வரை கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருந்த மணித்தியாலங்கள் எத்தனை என்பதையும்;

(ii) இவ்வாறு தடைப்பட்டமை மீது தாக்கம் செலுத்திய அடிப்படைக் காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

445/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டீ. சூரிய பண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முப்படைக்கான விசேட ஆட்சேர்ப்பு (இராணுவம்சார்) முறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட படை வீரர்கள் பல்வேறு தொழில்களில் கடமை நிமித்தம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் அந்த சேவைகளுக்கே தனித்துவமான சீருடைகளின்றி சிவில் உடையில் அல்லது வேலைக்கான உடை அணிந்து கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதற்கு உட்பட்டதாக இலங்கை கடற்படையின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 43 படை வீரர்களுக்கு சீருடைகள் அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதால் சிக்கல் தோன்றியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசேட ஆட்சேர்ப்பின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இன்றளவில் சேவையிலுள்ள படைவீரர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களுக்குரிய கடமைகள் மற்றும் உரித்தான சலுகைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சிவில் உடைக்கு மேலதிகமாக சேவைகளுக்கே தனித்துவமான சீருடைகளை இவர்கள் அணிய முடியுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(v) இவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள்/சுற்றறிக்கைகள்/கட்டளைகள் யாரால் வழங்கப்படுகின்றன என்பதையும்;

(vi) நிறுவனத் தலைவரின் தற்றுணிபின்படி இவர்களை சீருடை அணியுமாறு கட்டளையிட முடியுமா என்பதையும்;

(vii) (அ)(iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு படைவீரர்கள் சேவைக்கான சீருடை அணிந்தவாறு கடமையில் ஈடுபடுகின்றனரா என்பதையும்;

(viii) இன்றேல், சிவில் அல்லது வேலைக்கான உடை அணிந்து கடமையில் ஈடுபடுகின்றனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

569/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வந்து பணிபுரிய வேண்டும் என்ற கடுமையான நிபந்தனையின் கீழ், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் அல்லது பிற உயர் கல்வியை நிறைவுசெய்வதற்காக சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன்கீழ், 2005 ஆம் ஆண்டின் பின்னர் முன்னாள் சனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிதி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அத்தகையோரில் கலாநிதி பட்டம் பெற்று மீண்டும் நாடு திரும்பிய மற்றும் நாடு திரும்பாதோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(v) இலங்கைக்கு மீண்டும் திரும்பாத நபர்கள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) இவர்களுக்காக அரசாங்கத்தால் செலவிடப்பட்ட நிதி அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

570/2025

கௌரவ வருண லியனகே,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையானது, 2013 ஆம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டதையும், தற்போது அதில் சுமார் 25,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாக ஓய்வூதியம் செலுத்தப்படுதல் நிறுத்தப்பட்டுள்ளதால் அவர்களும் அவர்களில் தங்கி வாழ்பவர்களும் பாரிய சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், மேற்படி பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு வழங்கப்படுமென உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களுக்கு, தற்காலிக நடவடிக்கையாக பணிக்கொடையை நிறுத்திவைத்தேனும் ஓய்வூதியத்தை வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இதற்கு நிரந்தர தீர்வை வழங்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

574/2025

கௌரவ சானக மாதுகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரச காணிகளுக்கான உறுதிகளை கொண்டிருப்பவர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இன்றளவில் வழங்கப்பட்டுள்ள அறுதி உறுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் அறுதி உறுதிகளை பெற்றுக்கொள்வதற்கு அரச காணிகளுக்கான உறுதிகளை வைத்திருப்போர் தமது உறுதிகளை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைத்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உறுதிகளை மீள வழங்கும் நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

576/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைகளை இலக்காகக் கொண்டு நடாத்தப்படும் தனியார் வகுப்புகள் தொடர்பான ஒழுங்குறுத்தல்கள் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தனியார் வகுப்புகளை நடாத்தும் ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் கல்வித் தகைமைகள் பற்றி அறிந்துள்ளாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் பாடசாலை நாட்களில் மு.ப. 8.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைகளை இலக்காகக் கொண்டு தனியார் வகுப்புகள் நடாத்தப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(vi) மேற்படி தனியார் வகுப்புகளை நடாத்துவது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(viii) மேலே (v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனியார் வகுப்புகள் நடாத்தப் படுகின்றமையால் அரசாங்கப் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

584/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம் பொது வைத்தியசாலை நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையாக மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 08 ஆம் திகதிய 2418/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

பா. 29/2025

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ அசோக குணசேன

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்

கௌரவ அரவிந்த செனரத்

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத

கௌரவ சுகத் திலகரத்ன

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ உபாலி சமரசிங்ஹ

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ எரங்க வீரரத்ன

கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன

கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ சுனில் ராஜபக்ஷ

கௌரவ நாமல் கருணாரத்ன

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ வசந்த பியதிஸ்ஸ

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன

கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன

கௌரவ கயான் ஜனக

கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்

கௌரவ தினேஷ் ஹேமந்த

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன

கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல

கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ ஆனந்த விஜேபால

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ ஆர்.எம். ஜயவர்தன

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

கௌரவ ரியாஸ் பாருக்

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ சதுரங்க அபேசிங்ஹ

கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ

கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும

கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ அஜித் அகலகட

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ ரொஷான் அக்மீமன

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ கோசல நுவன் ஜயவீர

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர

கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ தேவானந்த சுரவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ நலின் ஹேவகே

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம

கௌரவ எம்.கே. எம். அஸ்லம்

கௌரவ அர்கம் இல்யாஸ்

கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி

கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன

கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்

கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ கே. இளங்குமரன்

கௌரவ சந்தன சூரியஆரச்சி

கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி

கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்

கௌரவ அருண பனாகொட

கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி

கௌரவ எண்டன் ஜயகொடி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ திலிண சமரகோன்

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே

கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ சுனில் குமார கமகே

கௌரவ எரங்க குணசேகர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி,— 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 5 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 3(ஈ) மற்றும் 3(உ) பிரிவுகளிற்கமைய, துர்நடத்தை மற்றும் பதவியின் தத்துவங்களை பாரதூரமாக துர்ப்பிரயோகம் செய்தமை காரணமாக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோனை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியிலிருந்து நீக்குவதற்கு மேற்படி சட்டத்தின் 5 பிரிவின் பிரகாரம் விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கான தீர்மானம்,— பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோன் (இதனகத்துப் பின்னர் தேசபந்து தென்னகோன் என குறிப்பிடப்படுகின்ற) ஒரு காலப் பகுதியில் மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாகச் செயற்பட்டாரென்பதாதலாலும்;

குறித்த தேசபந்து தென்னகோன் முன்னாள் சனாதிபதியால் 2023-11-21 திகதியன்றோ அல்லது அதற்கண்மித்த திகதியொன்றிலோ பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டாரென்பதாதலாலும்;

முன்னாள் சனாதிபதி, குறித்த நபரை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து 2024-02-26 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசபந்து தென்னகோன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டாரென்பதாதலாலும்;

தேசபந்து தென்னகோனை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமித்தமைக்கு, SC FR 67/2024, SC FR 68/2024, SC FR 71/2024, SC FR 72/2024, SC FR 75/2024, SC FR 79/2024, SC FR 80/2024, SC FR 82/2024 மற்றும் SC FR 84/2024 ஆகிய இலக்கங்களைக் கொண்ட ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக்களூடாக பொதுமக்கள் பலர் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தியுள்ளனரென்பதாதலாலும்;

குறித்த தேசபந்து தென்னகோனை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமித்தமை அரசியலமைப்புக்கு ஏற்புடையதா என்பதனை கேள்விக்குட்படுத்தி முகத்தோற்ற அளவில் வழக்கெழு காரணியொன்று இருப்பதாக மேற்படி மனுதாரர்களால் வழக்கொன்றைத் தொடுத்ததன் அடிப்படையில் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மேற்படி அடிப்படை உரிமை மனுக்களைத் தொடர மனுதாரர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு உயர் நீதிமன்றம் முடிவு செய்து, உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல தகவல்களையும் சாட்சியங்களையும் கருத்திற் கொண்டு, அது 2024-07-24 ஆம் திகதிய உத்தரவின் மூலம் தீர்மானித்துள்ளதாலும் மற்றும் மேற்படி உத்தரவின் மூலம் குறித்த நியமனம் அரசியலமைப்பின் உரிய ஏற்பாடுகளுக்கு முரணானது என்பது உயர்நீதிமன்றத்தால் உணர்த்தப்படுகின்றதென்பதாதலாலும்;

மேற்குறிப்பிட்ட மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட வலுவான முகத்தோற்ற அளவிலான வழக்கை பரிசீலித்த உயர் நீதிமன்றம், அந்த வழக்குகளின் இறுதித் தீர்மானம் வரை செல்லுபடியாகும் வகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தனது பதவியின் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும், கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதனைத் தடுக்கும் வகையில் தேசபந்து தென்னகோனுக்கு இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பிக்கவும் தீர்மானித்துள்ளதென்பதாதலாலும்;

அதன் பின்னர், உயர் நீதிமன்றத்தின் மேற்படி உத்தரவுக்கு இணங்க, சனாதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியின் தத்துவங்கள், கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஒருவரை நியமித்துள்ளாரென்பதாதலாலும்;

குறித்த தேசபந்து தென்னகோன் பல முறைகேடுகள் மற்றும் அதிகார துர்ப்பிரயோகம் போன்ற பல சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என்பதாலும்; பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ள அதேவேளை, அவற்றின் முழுமையான விபரங்கள் பின்வருமாறு:-

01. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற வகையில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் அனஸ்லெம் டி சில்வா, பொலிஸ் பரிசோதகர் மகேஷ் ருவன் துனுசிங்க, பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த, உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க, பொலிஸ் சார்ஜன்ட் 69480 பிரசாந்த குமார, பொலிஸ் சார்ஜன்ட் 57241 மனிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார, பொலிஸ் கான்ஸ்டபிள் 2204 சுபுன் பிரியஷான், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி 89728 துலீப் கிஹான் பியதிஸ்ஸ எனும் பெயருடைய எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவொன்றினை இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு அனுப்புவதற்கு சட்டவிரோதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

02. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற வகையில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவுக்குட்பட்ட பிரதான பொலிஸ் பரிசோதகர் அனஸ்லெம் டி சில்வா, பொலிஸ் பரிசோதகர் மகேஷ் ருவன் துனுசிங்க, பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த, உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க, பொலிஸ் சார்ஜன்ட் 69480 பிரசாந்த குமார, பொலிஸ் சார்ஜன்ட் 57241 மனிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார, பொலிஸ் கான்ஸ்டபிள் 2204 சுபுன் பிரியஷான், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி 89728 துலீப் கிஹான் பியதிஸ்ஸ எனும் பெயருடைய எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவொன்றினை இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு அனுப்புவதற்கு சட்டவிரோதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

03. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை WP PK 7225 எனும் இலக்கம் கொண்ட பொலிஸ் வாகனத்தைப் பயன்படுத்தி இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு மற்றும் அவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கை ஒன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

04. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை WP PK 7225 எனும் இலக்கம் கொண்ட பொலிஸ் வாகனத்தைப் பயன்படுத்தி இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு மற்றும் அவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கை ஒன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

05. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை சட்டவிரோதமான நடவடிக்கையொன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்காக அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

06. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை சட்டவிரோதமான நடவடிக்கையொன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்காக அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

07. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் கொண்ட குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழு, சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டதை, அதாவது, வெலிகம, பெலேனாவில் உள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்தியதை நன்கு அறிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

08. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் கொண்ட குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழு, வெலிகம, பெலேனவில் உள்ள W 15 விடுதியில் சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டதை அதாவது, வெலிகம, பெலேனாவில் உள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்தியதை நன்கு அறிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

09. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குறித்த குழுவில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை, நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியமை மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

10. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியமை மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

11. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், இரகசியமாக கொழும்புக்குத் திரும்புமாறு மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

12. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை, நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், இரகசியமாக கொழும்புக்குத் திரும்புமாறு மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

13. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்கள் சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அதாவது, வெலிகம, பெலேனவில் உள்ள W 15 விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

14. மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்கள் சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அதாவது, வெலிகம, பெலேனவில் உள்ள W 15 விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

15. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் அலுவலர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்களை சட்டவிரோதமான, குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதாவது, வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

16. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் அலுவலர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்களை சட்டவிரோதமான, குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதாவது, வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

17. 2025-02-27 ஆம் திகதி தொடக்கம் 2025-03-19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக இருந்த குறித்த தேசபந்து தென்னகோன், மாத்தறை கௌரவ நீதவான் அவர்களால் 2025-02-27 ஆம் திகதி, B R 6314/2023 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் அந்த வழக்கில் பிடியாணை பிறப்பித்தல் உட்பட ஏனைய இடைநேர்விளைவான கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் தலைமறைவாகியிருந்தமை மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றாகக் கருதப்படும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு தகுதியற்ற மற்றும் பொருத்தமற்ற ஒரு செயலைச் செய்துள்ளாரென்பதாதலாலும்;

18. 2025-02-27 ஆம் திகதி தொடக்கம் 2025-03-19 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக இருந்த குறித்த தேசபந்து தென்னகோன், மாத்தறை கௌரவ நீதவான் அவர்களால் 2025-02-27 ஆந் திகதி, B R 6314/2023 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் அந்த வழக்கில் பிடியாணை பிறப்பித்தல் உட்பட ஏனைய இடைநேர்விளைவான கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் தலைமறைவாகியிருந்தமை மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

19. 2025-02-27 ஆம் திகதி தொடக்கம் 2025-03-19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக இருந்த குறித்த தேசபந்து தென்னகோன், மாத்தறை கௌரவ நீதவான் அவர்களால் 2025-02-27 ஆம் திகதி, B R 6314/2023 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் அந்த வழக்கில் கௌரவ மாத்தறை நீதவான் அவர்களால் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகள் உட்பட ஏனைய இடைநேர்விளைவான கட்டளைகளுக்கு கீழ்ப்படியத் தவறியுள்ளமையாலும், இடம்பெற்றுக் கொண்டிருக்கும் முறையான சட்டச் செயன்முறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தலைமறைவாகியிருந்ததாகவும், சட்டவாட்சி, நீதி மற்றும் சட்ட அமுலாக்கம், சட்டத்தினை பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் புகழுருவுக்கும் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தி, ஒட்டமொத்த பொலிஸ் திணைக்களத்தின் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சிதைப்பதற்கு ஏதுவாகியதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றாகக் கருதப்படும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு தகுதியற்ற மற்றும் பொருத்தமற்ற செயலைச் செய்ததுள்ளாரென்பதாதலாலும்;

20. 2022-05-09 ஆம் திகதியன்று மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், MC Fort வழக்கு இல. B 22046/2022 இல் சந்தேக நபர்களான, லியனாரச்சிகே நிஷாந்த மெண்டிஸ், சுதுவதேவகே சுபாஷ் ஜயஷாந்த பெர்னாண்டோ, சிங்ஹார அமல் புஷ்பகுமார த சில்வா, விதான பதிரனகே மிலான் சஜித் ஜயதிலக, குருகமகே சனத் நிஷாந்த பெரேரா, லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் எனும் டான் பிரியசாத், வன்னக்குவடுகே சமன்லால் பெர்னாண்டோ, கம்லத் ஜயந்த ரோஹண, லியனகே கீதக பெரேரா, ஜயமான்ன கங்கானம்லாகே பந்துல விஜேகுமார, புஷ்பலால் குமாரசிரி, அமிதானந்த அபேவிக்ரம, கொம்பன்னாகே மிணி பிரசாந்தி பொன்சேகா எனும் வெல்லே ரமணி, அசங்க நாயக விஜேசிங்க என்கிற சதா நாலக்க எனும் அராபி வசந்த, கெஸ்பலாகே டொன் அருண பிரியசாந்த, அஜந்தா லியனகே, கோனியமாலிகே சுபெம்சிரி அபொன்சு, சமரக்கொடி ஜயலத் வசந்தா சரோஜினி ஜயலத் எனும் ஹந்தபாங்கொட, தெல்கே ஆரியதாச பீரிஸ், கீரிகம பமுனுவகே நரேந்திர துலிப் பெர்னாண்டோ, கஹந்தகமகே மஹிந்தரத்ன, நிஷாந்த சாமின் உபதிஸ்ஸ ஜயசிங்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருப்புஆரச்சிகே டொன் சஜித் சாரங்க, ரணபாகு முதியன்சேலாகே துசித சம்பத் நானாயக்கார, ஹொரணகே பிரதீப் சிரியந்த பெர்னாண்டோ, லியனகே ஷானக அன்டனி பெர்னாண்டோ, மகாவத்தகே பிரியனாத் மக்கென்சி பெர்னாண்டோ, பபினா ஹென்னதிகே கயான் புஸ்பகுமார பீரிஸ், கபுவத்தகெதர பிரகீத் சுஜீவ பண்டார, குருப்பு முதியன்சேலாகே லலித் உதேஷ் மதுபானு ஆகிய சில ஆட்களில் தண்டனைச் சட்டக்கோவையின் 314, 316, 343, மற்றும் 300 ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை அல்லது அலட்சியம் செய்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

21. 2022-05-09 ஆம் திகதியன்று மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், MC Fort வழக்கு இல. B 22046/2022 இல் சந்தேக நபர்களான, லியனாரச்சிகே நிஷாந்த மெண்டிஸ், சுதுவதேவகே சுபாஷ் ஜயஷாந்த பெர்னாண்டோ, சிங்ஹார அமல் புஷ்பகுமார த சில்வா, விதான பதிரனகே மிலான் சஜித் ஜயதிலக, குருகமகே சனத் நிஷாந்த பெரேரா, லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் எனும் டான் பிரியசாத், வன்னக்குவடுகே சமன்லால் பெர்னாண்டோ, கம்லத் ஜயந்த ரோஹண, லியனகே கீதக பெரேரா, ஜயமான்ன கங்கானம்லாகே பந்துல விஜேகுமார, புஷ்பலால் குமாரசிரி, அமிதானந்த அபேவிக்ரம, கொம்பன்னாகே மிணி பிரசாந்தி பொன்சேகா எனும் வெல்லே ரமணி, அசங்க நாயக விஜேசிங்க எனும் சதா நாலக்க எனும் அராபி வசந்த, கெஸ்பலாகே டொன் அருண பிரியசாந்த, அஜந்தா லியனகே, கோனியமாலிகே சுபெம்சிரி அபொன்சு, சமரக்கோடி ஜயலத் வசந்தா சரோஜினி ஜயலத் எனும் ஹந்தபாங்கொட, தெல்கே ஆரியதாச பீரிஸ், கீரிகம பமுனுவகே நரேந்திர துலிப் பெர்னாண்டோ, கஹந்தகமகே மஹிந்தரத்ன, நிஷாந்த சாமின் உபதிஸ்ஸ ஜயசிங்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருப்புஆரச்சிகே டொன் சஜித் சாரங்க, ரணபாகு முதியன்சேலாகே துசித சம்பத் நானாயக்கார, ஹொரணகே பிரதீப் சிரியந்த பெர்னாண்டோ, லியனகே ஷானக அன்டனி பெர்னாண்டோ, மகாவத்தகே பிரியனாத் மக்கென்சி பெர்னாண்டோ, பபினா ஹென்னதிகே கயான் புஸ்பகுமார பீரிஸ், கபுவத்தகெதர பிரகீத் சுஜீவ பண்டார, குருப்பு முதியன்சேலாகே லலித் உதேஷ் மதுபானு ஆகிய சில ஆட்களில் தண்டனைச் சட்டக்கோவையின் 314, 316, 343, மற்றும் 300 ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை அல்லது அலட்சியம் செய்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3 (உ) ஆம் பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

22. முழு நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் கடமை ஒப்படைக்கப்பட்ட, நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியை வகித்த குறித்த தேசபந்து தென்னகோன், மேற்கூறிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துர்நடத்தைச் செயல்களை மற்றும்/அல்லது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்தமை, நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவி மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமை மற்றும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு பொருத்தமற்ற செயல்களைச் செய்தமை ஆகியவற்றின் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3 (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் துர்நடத்தைக்குரிய செயல்களைப் புரிந்துள்ளாரென்பதாதலாலும்; மற்றும்

23. வேறுபட்ட தன்மையிலான விரிவான தத்துவங்களுடைய நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியை வகித்த குறித்த தேசபந்து தென்னகோன், மேற்கூறிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துர்நடத்தைச் செயல்களை செய்ததன் மூலம் மற்றும்/ அல்லது பதவியின் தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்ததன் மூலமும், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம், துர்நடத்தைக்குரிய செயலாக கருதப்படும் நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக பதவிவகிக்கும் ஆளொருவரிடமிருந்து எதிர்பார்க்கும் உயர் தரத்திலான நடத்தையைக் கொண்டிருக்காமையால் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு பொருத்தமற்றவராக மாறியுள்ளாரென்பதாதலாலும்.

அரசியலமைப்பினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பாராதீனப்படுத்தப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும், நீதிக்கான ஒட்டுமொத்த நிர்வாக முறைமையின் சுயாதீனத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காகவும்; நியாயமான மற்றும் சுதந்திரமான சமூகத்தை உருவாக்கும் மற்றும் பாதுகாக்கும் பணி சாட்டப்பட்டுள்ளதொரு முதனிலைச் சட்ட அமுலாக்க நிறுவனம் என்ற வகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவி மற்றும் பொலிஸ் திணைக்களம் மீது இந்த நாட்டின் பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காகவும், மேற்கூறிய துர்நடத்தைச் செயல்கள் மற்றும்/அல்லது தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

*4.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கை (2023),— 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் 2025.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2023 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.02.28 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டின் ஆண்டறிக்கை (2023),— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிறுவனங்கள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் 2025.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டின் 2023 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.02.28 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2025.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2022 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— ஆயுர்வேத மருத்துவப் பேரவையின் வருடாந்த அறிக்கை (2023),— 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் கீழ் 2025.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஆயுர்வேத மருத்துவப் பேரவையின் 2023 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை (2022),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவின் கீழ் 2024.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.12 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் ஆண்டறிக்கை (2022),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் 23(4) ஆம் பிரிவின் கீழ் 2024.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.12 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2023),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவின் கீழ் 2025.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.12 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2023),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் 23(4) ஆம் பிரிவின் கீழ் 2025.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.12 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2019 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.02.28 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் ஆண்டறிக்கை (2021/2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2024.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் 2021/2022 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் பற்றிய அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.02.28 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக் குழுவின் அறிக்கையானது 2025.03.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவகத்தின் 2022 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.02.28 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2015/2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் 2015/2016 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— மாந்தை உப்பு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2020/2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2024.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மாந்தை உப்பு லிமிடட்டின் 2020/2021 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையின் ஆண்டறிக்கை (2022),— 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேசிய அருங்காலைகள் பேரவையின் மற்றும் இணைப்பு நிறுவனங்கள் சட்டத்தின் 64 ஆம் பிரிவின் கீழ் 2025.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கைவினைக் கைத்தொழில் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் 2025.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கை (2023),— 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேசிய அருங்கலைகள் பேரவையின் மற்றும் இணைப்பு நிறுவனங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் 2025.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய அருங்கலைகள் பேரவையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.04 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— மத்திய கலாசார நிதியத்தின் ஆண்டறிக்கை (2016),— 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(4) ஆம் பிரிவின் கீழ் 2025.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மத்திய கலாசார நிதியத்தின் 2016 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.08 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**